**செ. கு. எண்**: 396 **நாள்**: 06.11.2012

# மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

## அறிக்கை – 6.11.2012

"பிரதீபா காவேரி'' என்ற தனியார் சரக்குக் கப்பல் "நீலம்" புயல் காரணமாக 31.10.2012 அன்று வங்கக் கடலில் வீசிய கடுமையான காற்றினால் இழுத்துச் செல்லப்பட்டு சென்னை ஊரூர் குப்பம் அருகே தரை தட்டியது.

அந்த சமயத்தில் தரை தட்டிய கப்பலிலிருந்து 25 நபர்கள் அக்கப்பலில் உள்ள உயிர் காக்கும் படகில் ஏறி கரை சேர முயன்ற போது, அப்படகும் கவிழ்ந்து அனைவரும் கடலுக்குள் வீழ்ந்து உயிருக்காக போரடிய வேளையில், ஊரூர் குப்பத்தைச் சேர்ந்த திரு. விஜயரங்கன் என்பவரின் மகன் திரு. வடிவேலு, திரு. பழனி என்பவரின் மகன் திரு. கலைமணி, திரு. வைத்தியநாதன் என்பவரின் மகன் திரு. உதயமூர்த்தி மற்றும் திரு. கரிவரதன் என்பவரின் மகன் திரு. மதன் ஆகிய நான்கு மீனவர்களும் திரு. கோபி என்பவருக்கு சொந்தமான படகை எடுத்துக் கொண்டு, தங்கள் உயிரையும் பொருட்படுத்தாமல், சமுதாய அக்கறையோடு கடலுக்குள் சென்று உயிருக்கு போராடிய ஐந்து பணியாளர்களைக் காப்பாற்றி பத்திரமாக கரை சேர்த்தனர்.

இந்த மீனவர்கள் சமயோசிதமாக யாருடைய உந்துதலும் இன்றி, தங்களது உயிரையும் துச்சமென மதித்து கடும் புயல் வீசிக் கொண்டிருந்த சமயத்தில் கடலுக்குள் சென்று கப்பல் பணியாளர்களை மீட்டெடுத்த துணிவான செயல்பாட்டினை நான் பாராட்டி வாழ்த்துகிறேன். கடலில் தத்தளித்துக் கொண்டிருந்தவர்களைக் காப்பாற்ற தனது படகினை அளித்து கடலுக்குள் செல்ல அனுமதித்த திரு. கன்னியப்பன் என்பவரின் மகன் திரு. கோபி அவர்களையும் நான் பாராட்டுகிறேன்.

இந்த மீனவர்களின் வீரச் செயலையும், தன்னலம் கருதாத அவர்களின் சமுதாய அக்கறையையும் பாராட்டி அங்கீகரிக்கும் வகையில் திரு. கோபி, திரு. வடிவேலு, திரு. கலைமணி, திரு. உதயமூர்த்தி, திரு. மதன் ஆகிய ஐவருக்கும் தலா ஒரு லட்சம் ரூபாய் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழக முதலமைச்சர்

**வெளியீடு:**
**இயக்குநர், செய்தி – மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**